கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

2025ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 28ம் தேதி வியாழக்கிழமை
இடைநிலை மனு எண்.1139/2018
இன்
அசல் வழக்கு எண்.691/2012
----

நவநீதன் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1) கணேசமூர்த்தி என்ற கேபிள் கணேசன்
2) தமிழ்நாடு அரசுக்காக, மாவட்ட ஆட்சியர், மதுரை.
3) தமிழ்நாடு அரசுக்காக, தாசில்தார், மதுரை தெற்கு தாலுகா.
4) ஆணையர், மதுரை மாநகராட்சி.

... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இறுதியாக இம்மனுவானது 12.08.2025ல் இந்நீதிமன்றத்தில் விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.பொன்னம்பலம் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.G.சங்கர் கணேஷ் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4

எதிர்மனுதாரர்கள்/2 முதல் 4 பிரதிவாதிகள் ஒருதலைபட்சமாக்கப்பட்டும் இருந்த வழக்கில், இருதரப்பு வாதுரைகளுக்கு போதிய வாய்ப்பளித்தும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

## உத்தரவு

இம்மனுவானது மனுதாரர்/வாதியால் அசல் வழக்கின் பிராதை திருத்தம் செய்ய வேண்டி கட்டளை 6 விதி 17ன் மற்றும் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 1. மனுவின் சுருக்கம்:–

1.1) அசல் வழக்கானது கடந்த 2012ம் ஆண்டு பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவில், அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட பிராது விபரத்தில் திருத்தம் செய்ய வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த எதிருரையில், இந்த மனுவினை தாக்கல் செய்திருப்பது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், எனவே இம்மனுவை 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் கூறி ஆட்சேபணை தெரிவித்துள்ளார்.

**3) <u>தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதேயாகும்.</u>**

இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

3.1) மனுதாரர்/வாதி தனது மனுவில், அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டபோது, பிராது சொத்து விபரத்தில் மேற்படி விவரங்கள் சேர்க்காமல் விடுபட்டுவிட்டது என்றும், பிராதை திருத்தம் செய்ய வேண்டும் என்றும், எனவே, அசல் வழக்கில் மேற்படி சீர்திருத்தங்களை மேற்கொள்வது அவசியமானது என்று குறிப்பிட்டுள்ளார்.

3.2) வழக்குச்சொத்து குறித்த முழுமையான தகவல் பிராதில் குறிப்பிடவில்லை என்றும், அதனை சரிசெய்யும்விதமாக மேற்படி சீர்திருத்தங்கள் உள்ளது என்றும் மனுதாரர்/வாதி தரப்பில் கூறும்

வாதத்தை ஏற்றும், மேற்படி சீர்திருத்தங்கள் வழக்கு சொத்தை மிகவும் தெளிவுபடுத்தும்விதமாகவும், தற்போதைய நிலவரப்படி உள்ள புதிய சர்வே எண்களை சேர்க்கும் விதமாகவும் உள்ளதை கருத்தில் கொண்டும், மேற்படி வழக்குத்தரப்பினர்களுக்கு இடையே உள்ள பிரச்சனையை முழுமையாக தீர்வு காண்பதற்கு மேற்படி சீர்திருத்தங்கள் அவசியமானதாக உள்ளது என்பதை கருத்தில்கொண்டும், இம்மனுவினை அனுமதிப்பதால் தரப்பினர்களுக்கு இடையே மீண்டும் ஒரு வழக்கு தாக்கல் செய்வதை தவிர்க்கும்விதமாகவும் இருப்பதால் மேற்படி சீர்திருத்தமானது அவசியமானது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**முடிவாக,** மனுதாரர்/வாதியின் இம்மனுவானது அனுமதித்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.08.28 17:48:38 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

<u>இணைப்பு:</u>

**சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இருதரப்பிலும் தாக்கல் இல்லை.**

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.08.28 17:48:47 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(FAC)**
**திருமங்கலம்.**

இடைநிலை மனு எண்.1139/2018
இன்
அசல் வழக்கு எண்.691/2012
வரைவு/செவ்வை உத்தரவு
நாள் : 28.08.2025